சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | ஸ்டாலின் |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | முகந்தனூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | வட்டாட்சியர், குடவாசல் |
| வயது | : | 47 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது குடவாசல் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக நன்னிலம் உட்கோட்ட காவல் துணை

கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் , கடந்த 30.07.2025 ம் தேதியன்று அ.சா.1 செல்வராஜ் என்பவரின் கூரை வீடு 04.06.2025 ம் தேதியன்று வீடு எரிந்தது தொடர்பாக சேதமடைந்த வீட்டின் சேத மதிப்பு கோரப்பட்டது. மேற்படி சேத மதிப்பை குறித்து திருக்கண்ணமங்கை சரக வருவாய் ஆய்வாளர் மற்றும் 5 புலவனூர் கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1). கூரைவீடு, 2) லேப் டாப் -1, 3) மரக்கட்டில் - 1, 4) சூட்கேஸ் பெரியது -1, 5) மர பீரோ - 1, 6 ) சமையல் பாத்திரங்கள், 7) கிரைண்டர் -1, 8) மிக்சி - 1, 9) குக்கர் - 1, 10) கைப்பேசி - 2, 11) முடி வெட்டும் மிஷின் - 1, 12 ) மின்விசிறி - 1, 13) வீட்டு பத்திரம், 14) மாற்று சான்றிதழ், 15) மகளின் பள்ளி புத்தகங்கள், 16) ஆடைகள், மேற்படி பொருட்களின் உத்தேச மதிப்பு தோராயமாக ரூ.2,50,000/- இருக்கும் என கிராம விசாரணையில் தெரிய வருகிறது என ஒரு கடிதம் கொடுத்துள்ளேன். அந்த கடிதம் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள பொருட்களுக்கான சேத மதிப்பு செய்து சேத மதிப்பீட்டாளரிடமிருந்து சான்றிதழ் வாங்கவில்லை என்று சொன்னால் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், ஆகியோர் அளித்த சான்றிதழ்களின் படி வழங்கியுள்ளேன். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சேத மதிப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.10** மற்றும் வருவாய் ஆய்வாளர் கொடுத்த சேதமதிப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், ஆகியோர்களை நான் எப்போது விசாரித்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் ஆமாம். கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், ஆகியோர்கள் போய் பார்த்தார்கள்.

நான் நேரிடையாக சென்று மதிப்பீடு செய்யவில்லை என்று சொன்னால்

ஆமாம்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு
செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம்
படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என்
முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:29:32 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.